O.S.No.359/2023 – Date : 29.01.2026

PW1 – பழனிசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதி என்னிடம் எங்கே வைத்து பணம் கேட்டார் என்றால் எனது வீட்டில் வைத்து கேட்டார். பிரதிவாதி என் வீட்டிற்கு வரவேயில்லை என்றும் அப்போது கொரோனா காலம் என்பதால் பிரதிவாதி என்னிடம் வீட்டிற்கு வந்து பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி குறிப்பாக எப்போது பணம் கேட்டார் என்று நான் சொல்லவில்லை என்பதால் பிரதிவாதி என்னிடம் பணமே கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 6,7 கிலோமீட்டர் இருக்கும். பணம் கொடுக்கும்போது புரோநோட் தவிர வேறு எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் சரி. பண பரிவர்த்தனை நடக்கும்போது தொகை அதிகம் என்பதால் அப்போதே ஆவணங்கள் வாங்கியிருப்பேன் என்றும் நான் அவ்வாறு வாங்கவில்லை என்பதால் பண பரிவர்தனையே நடக்கவில்லை என்றால் சரியல்ல. தமிழ்மணி என்பவர் நான் சொல்லி வந்தார் என்றால் பிரதிவாதி சொல்லி வந்தார். புரோநோட்டை நானாக தயார் செய்து பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.